## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.538/2024
Sessions)

( Prosecution P.W.4
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | கோமதிபிரியா | -- | |
| Husband's Name | முத்துமணி | Calling | ஆசிரியை |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.
Accused absent. Petition filed.

**முதல் விசாரணை**

நான் திருவில்லிபுத்தூர் இடையபொட்டல் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன முத்துமணி எனது கணவர். எனது கணவர் இராஜபாளையம் பழைய ஆர் டி ஓ ஆபிசில் அருகில் உள்ள மாருதி கார் கம்பெனியில் வேலை பார்த்து வந்தார். எங்களுக்கு தற்போது பொன் குரு தேவ் 6 வயது மகன் உள்ளார். எனது கணவருடன் குருமூர்த்தி என்பவரும் வேலை பார்த்து வந்தார். 30.08.2023 ம் தேதி நான் கோவில்பட்டியில் உள்ள எனது அம்மா வீட்டில் இருந்தேன். காலை 09.00 மணியளவில் எனது மாமா முருகன் என்பவரிடமிருந்து எனக்கு போன் வந்தது. நான் என்ன என்று கேட்டபோது எனது கணவர் முத்துமணி காலையில் குருமூர்த்தியுடன் வேலைக்குச் சென்று கொண்டிருந்தபோது வன்னியம்பட்டி காவல் நிலையம் அருகில் உள்ள ரோட்டில் கேரளாவைச் சேர்ந்த ஒரு டாக்டரின் கார் மோதி விபத்து ஏற்பட்டதாகவும் அதில் எனது கணவரும், குருமூர்த்தியும் சம்பவ இடத்திலே இறந்துவிட்டதாக தெரிவித்தார். உடனடியாக நான் அம்மாவுடன் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்து இறந்து போன என் கணவரின் சடலத்தையும் மற்றும் குருமூர்த்தியின் சடலத்தையும் பார்த்தேன். இது சம்மந்தமாக எனது கணவருடன் வேலை பார்த்து வரும் மணிராஜா என்பவர் புகார் கொடுத்திருப்பதாக தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் கணவரின் இறப்பிற்காக நஷ்டஈடு கேட்டு வழக்குப் போட்டுள்ளோம். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விசயங்கள் வழக்கிற்காக

பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN Digitally signed by M VEERANAN Date: 2026.01.19 11:41:54 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**